06.03.2026 OS.No.179/2021 DW3 Name :.கிருஷ்ணமூர்த்தி

குறுக்கு விசாரணை

1. எனக்கு படிப்பறிவு இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதற்கு முன் சாட்சியம் கூறியுள்ள சாட்சியங்களில் அதே சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. ஒரே மாதிரியான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணுகவுண்டருக்கு மூன்று பிள்ளைகள் என்பது தெரியும். முனிசாமி, கண்ணுகவுண்டர், சுப்பிரமணி என்றால் சரிதான். அசல் பத்திரம் என்னிடம் இல்லை என்பது எனக்கு தெரியும்.
2. அசல் பத்திரத்தை நாகராஜியிடமிருந்து திரும்ப பெற சட்டபடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. சர்வே எண். 144 பல உட்பிரிவு செய்யபட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. உட்பிரிவு செய்யபட்டுள்ளதை தெரிந்துக்கொண்டு தற்போது மறைத்து தவறாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. காணற்றிலிருந்து பொதுகளம்வரை வழி தற்போதும் வந்துக்கொண்டு உள்ளது. சர்வே எண்.144ல் வழி ஆரம்மிக்கிறது என்றால் காணற்றிலிருந்து ஆரம்பிக்கிறது.
3. சர்வே எண்.144ல் எந்த வழியும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.144ல் எந்த உட்பிரிவு வழியாக வழி பாத்தியம் செல்கிறது என்பதை பிரமாண பத்திரத்தில் கூறிப்பிடவில்லை. சர்வே எண். 144ல் தான் போர் போட்டேன். வேறு உட்பிரிவு போர் இருந்தால் அது எங்களுக்கு பாத்தியபட்டது கிடையாது என்றால் சரியல்ல. போர் போடுவதற்கு எவ்வளவு செலவானது என்று எனக்கு நியாபகம் இல்லை.

4. மொத்தம் 5 பேர் சேர்ந்து போர் போட்டோம். கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தன், முனிரத்தினம், கணேஷன், முருகேசன் ஆகியோர்கள் சேர்ந்து போட்டோம். முருகேசன் பாகத்தில் போர் போட்டோம். அதை வழக்கில் சொல்லியுள்ளேன். அவ்வாறு கூறாமல் இருந்தால் அது தவறாகும். முருகேசன் பாகத்தில் நாங்கள் எந்த போரும் போடவில்லை என்றும் அந்த போர் நாகராஜன் என்பருக்கும் அவர் தம்பிக்கும் சொந்தமானது என்றால் சரியல்ல. அது சர்வே எண். 144/7எ-ல் உள்ளது என்றால் சரியல்ல.

5. நாங்கள் தான் நாகராஜனை தொந்தரவு செய்கிறோம் என்றால் சரியல்ல. 30 செண்ட் களத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அவ்வாறு எந்த ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. நாகராஜன் அவருடைய மகன்கள் பெயரில் ஏற்படுத்தியுள்ள பத்திரங்கள் பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாகராஜன் நிலத்திற்கு வடக்கில் வழிபாத்தியம் உள்ளது. அதற்கு அருகில் பள்ளம் உள்ளது. நாகராஜன் நிலத்திற்கு வடக்கில் 5 அடி பள்ளம் உள்ளது. பொதுவழியை அழித்து விட்டோம் என்றால் சரியல்ல. கண்ணுகவுண்டர் பாகத்தில் புதியதாக வழி ஏற்படுத்தி நாகராஜன் வகையரா அனுபவிக்கிறாார்கள் என்றால் சரியல்ல. அந்த வழியை உரிமை கொண்டாடி பிரச்சனை செய்கிறோம் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 06/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.06 16:46:10 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.